# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**10.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. 108 ஆம்புலன்ஸ் சேவை

- அவசர உதவிக்கான 108 ஆம்புலன்ஸ் சேவை மூலம் தமிழகத்திலேயே அதிகபட்சமாக **சென்னை மாவட்டத்தில்** இதுவரை **8.66 லட்சம் பேர்** பயன் அடைந்துள்ளனர்.
- அதற்கு அடுத்தபடியாக **திருவள்ளூர் மாவட்டத்தில் 6.89 லட்சம் பேர்** பயன்படுத்தியுள்ளனர்.
- தமிழகத்தில் **ஜி.வி.கே, இ.எம்.ஆர்.ஐ** நிறுவனம் மூலமாக 108 ஆம்புலன்ஸ் சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இதன் மூலம் மொத்தம 1200க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்கள் இயக்கப்படுகின்றன.
- ஏறத்தாழ 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.
- கடந்த 14 ஆண்டுகளில் 108 ஆம்புலன்ஸ் சேவை மூலம் சென்னையில் மட்டும் 8.66 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.
- பிரசவ சிகிச்சைகளுக்காக பயணித்த **77.374 கர்ப்பிணிகள்** பயன்படுத்தியுள்ளனர்.
- அதுமட்டுமல்லாது சாலை விபத்துகளில் சிக்கிய 1.24 லட்சம் பேர் வைக்கப்பட்ட சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.
- திருவள்ளூர் மாவட்டத்தை பொருத்தவரை இதுவரை 6.89 லட்சம் பேர் பயன் அடைந்துள்ளனர்.
- அவர்களில் 1.94 லட்சம் கர்ப்பிணிகளும் சாலை விபத்துக்குள்ளான 1.12 லட்சம் பேரும் 108 ஆம்புலன்ஸ் சேவையை பயன்படுத்தி பலன் அடைந்துள்ளனர்.
- அவசர காலங்களில் தாமதம் இன்றி ஆம்புலன்ஸ் சேவைகள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து உறுதி செய்து வருகிறோம் என்று **சந்தீப்குமார்** தெரிவித்தார்.

## மத்திய செய்திகள்

### 1. நேரடி வரி வசூல் 23.8% அதிகரிப்பு

- மத்திய அரசின் நேரடி வரி வருவாய் நிகழாண்டில் நிலையான வளர்ச்சியுடன் அக்டோபர் எட்டாம் தேதி வரை மொத்தம் **ரூபாய் 8.98 லட்சம் கோடி** வசூலாகி உள்ளதாக மத்திய அமைச்சகம் தெரிவித்தது.
- இது கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் **23.8% வளர்ச்சி** எனவும் நிகழாண்டு வசூல் இலக்கில் **52 சதவீதம்** பூர்த்தி அடைந்து விட்டது எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தனிநபர் வருமான வரியில் ( பங்கு பரிவர்த்தனை வரி உள்பட) **32 சதவீத** வளர்ச்சியும் பெரு நிறுவன வரி வருவாய் **16.73 சதவீதமும்** அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சகத்தின் வருவாய் துறை தெரிவித்துள்ளது.

- நேரடி வரியில் கூடுதலாக செலுத்தியவர்களுக்கு ₹ 1.53 லட்சம் கோடி திரும்ப செலுத்தப்பட்ட வரி போக நிகழாண்டின் **ஏப்ரல் 1 முதல் அக்டோபர் எட்டு** வரை நிகர நேரடி வரி வசூல் ரூபாய் 7.45 லட்சம் கோடி ஆகும்.
- இது கடந்தாண்டில் இதே காலகட்டத்தை விட 16.3% கூடுதலாகும்.
- தனிநபர் வசூலிலும் பெருநிறுவன நேரடி வருவாய் வரி வசூலையும் தனித்தனியாக ஒப்பிட்டால் முறையே **16.25%, 16.29%** அதிகரித்துள்ளது.
- மேலும் 2022-23ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கை மதிப்பின்படி முழு ஆண்டு வரி வசூல் இலக்கில் 52.46 சதவீதம் தற்போது பூர்த்தியாகி உள்ளது எனவும், தெரிவித்துள்ளது.
- 2021-22 நிதியாண்டில் **ரூபாய் 14.10 லட்சம் கோடி** நேரடி வரி வசூலானது.
- இந்த நிதி ஆண்டில் நேரடி வரி வசூல் ரூபாய் 14.20 லட்சம் கோடியாக இருக்கும் என நிகழ நிதிநிலை அறிக்கையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

## 2. மொடேரா கிராமம்

- **சூரிய ஆற்றல் மூலமாக 24 மணி நேரமும் எரிசக்தி** பெறும் நாட்டின் முதல் கிராமம் என குஜராத்தின் மொடேராவை நரேந்திர மோடி அறிவித்தார்.
- குஜராத்தில் சூரிய கோவிலுக்கு புகழ் பெற்றது **மெசானா** மாவட்டத்தில் உள்ள மொடேரா கிராமம்.
- அங்கு சூரிய ஆற்றல் மூலமாக எரிசக்தி தயாரிப்பதற்கான பல்வேறு திட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டன.
- **1300க்கும் அதிகமான** வீடுகள் மற்றும் அலுவலகங்களின் மேற்புறத்தில் சூரிய எரிசக்தி உற்பத்தி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன.
- இதன் மூலம் அதன் அந்த கிராமமானது 24 மணி நேரமும் சூரிய சக்தி மூலமாக மின்சாரம் பெறும் வசதியை பெற்றுள்ளது.
- அத்தகைய வசதியை பெறும் நாட்டின் முதல் கிராமம் என்று பெருமையையும் மொடேரா பெற்றுள்ளது.

## 3. ஹிந்தி பேசாத மாநிலங்களின் உயர் கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக உள்ளூர் மொழி

- கடந்த **1976 ஆம் ஆண்டு** அலுவல் மொழிக்கான நாடாளுமன்ற குழு அமைக்கப்பட்டது.
- **அலுவல் மொழி சட்டம் 1963** இன் கீழ் அமைக்கப்பட்ட இந்த குழுவில் 20 மக்களவை எம்.பிகள் 10 மாநிலங்களவை எம்பிக்கள் என மொத்தம் **30 எம்.பிகள்** உள்ளனர்.
- ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நிலையில் இந்த முறை **மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டு அறிக்கை** காண அந்தக் குழு சமர்ப்பித்துள்ளது.
- இந்நிலையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையிலான அந்த குழு தனது **11 வது அறிக்கையை** குடியரசு தலைவர் திரௌபதி முர்முவிடம் கடந்த மாதம் சமர்ப்பித்தது.

- அதில் 100க்கும் மேற்பட்ட பரிந்துரைகள் இடம்பெற்றுள்ள தகவல் தற்போது வெளியாகியுள்ளது.
- நாட்டில் உள்ள ஹிந்தி பேசும் மாநிலங்களில் இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் **(ஐஐடி) மத்திய பல்கலைக்கழகங்கள், கேந்திரிய வித்யாலயா கல்வி நிறுவனங்களில்** பயிற்று மொழியாக ஹிந்தி இருக்க வேண்டும்.
- ஹிந்தி பேசாத மாநிலங்களில் உள்ள ஐஐடிகள் மத்திய பல்கலைக்கழகங்கள், கேந்திரிய வித்யாலயா கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக உள்ளூர் மொழிகள் இருக்க வேண்டும்.
- விருப்பமிருந்தால் ஆங்கிலத்தை பயன்படுத்தலாம் ஹிந்தி பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
- இதில் **ஏ பிரிவில் உத்தரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், உத்தரகண்ட், ஜார்கண்ட், ஹரியானா, இமாச்சல பிரதேசம், ராஜஸ்தான், தில்லி மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள்** உள்ளன.
- **பி பிரிவில் குஜராத், மகாராஷ்டிரம், பஞ்சாப், சண்டிகர், டாமன் டையூ மற்றும் தாத்ரா நகர் ஹவேலி** உள்ளன.
- நாட்டின் இதர பகுதிகள் சி பிரிவில் இடம்பெற்றுள்ளன.
- இதில் ஏ பிரிவில் உள்ள மாநிலங்களில் இந்திக்கு மதிப்புக்குரிய இடம் அளிக்கப்பட்டு அதன் பயன்பாடு **100 சதவீதமாக** இருக்க வேண்டும்.
- மத்திய அரசு அலுவலகங்கள், அமைச்சகங்கள் துறைகளில் கடிதங்கள், மின்னஞ்சல்கள் போன்றவை இந்திய அல்லது உள்ளூர் மொழிகளில் இருக்க வேண்டும்.
- ஐநாவின் அலுவல் மொழிகளில் ஒன்றாக இந்தி இருக்க வேண்டும் உள்ளிட்ட பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன.